**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, மதுராந்தகம்**

**முன்னிலை:– திருமதி.N.வள்ளியம்மா, Bsc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண் 1, மதுராந்தகம்**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ம் நாள் திங்கள்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 233/2025**

| | |
|---|---|
| அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>மதுராந்தகம் காவல் நிலையம்<br>குற்ற எண்.173/2019<br>இதச பிரிவுகள். 147, 294(b), 323, 324, 506 (2) IPC | குற்றமுறையீட்டாளர் |
| எதிரி | |
| A1–அண்ணாமலை, வயது.48, த/பெ.ஜானகிராமன்,<br>திருவள்ளுவர் தெரு, வேடந்தாங்கல் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A2– தயாளன், வயது.42, த/பெ.ஜானகிராமன்,<br>எண்.128, தக்கூர் தெரு, புவனேஸ்வரி நகர்,<br>ஆத்தூர் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A3–வீரராகவன், வயது.49, த/பெ.ஜானகிராமன்,<br>பார்க் மெயின் ரோடு, வேடந்தாங்கல் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A4– பூபாலன், வயது.35, த/பெ.ஜானகிராமன்,<br>எண்.29, படவேட்டம்மன் கோயில் தெரு,<br>வேடந்தாங்கல் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A5–தேவி, வயது.36, க/பெ.குமார்,<br>எண்.191, கோயில் தெரு, கொன்னேரி குப்பம் கிராமம்,<br>காஞ்சிபுரம் மாவட்டம். | எதிரிகள் |

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு ROC. No. 814/2020/RG/F1, Dt

07.04.2021 இன் படியான இவ்வழக்கின் விவரங்கள் கீழ்வருமாறு :-

| | |
|---|---|
| Name of the Court | Judicial Magistrate No. I, Madurantakam. |
| Name of the Judge | Tmt. N.Valliamma, B.Sc., B.I., |
| Date of Judgment | 15.06.2026 |
| Case Number along with CNR Number | CC. 233/2025<br>TNCG-15-002193-2025 |
| Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Madurantakam PS.<br>**Complainant** |
| | A1-அண்ணாமலை, வயது.48, த/பெ.ஜானகிராமன்,<br>A2- தயாளன், வயது.42, த/பெ.ஜானகிராமன்,<br>A3-வீரராகவன், வயது.49, த/பெ.ஜானகிராமன்,<br>A4- பூபாலன், வயது.35, த/பெ.ஜானகிராமன்,<br>A5-தேவி, வயது.36, க/பெ.குமார்,<br>**Accused** |
| Date of Occurrence | 01.05.2019 |
| Date of Complainant | 02.05.2019 |
| Period of Remand | Anticipatory bail A1 - A5-16.05.2019 |
| Released on Bail | Anticipatory bail A1 - A5-16.05.2019 |
| Final Report in the Court | 25.11.2019 |
| Committal/Taken on File | 18.09.2025 |
| Questioning U/s.316 of BNSS | 06.11.2025 |
| Results on Challenge before Superior Courts | - |

| | | | |
|---|---|---|---|
| Chief & Cross Examination | PW1 | 02.12.2025 | 02.12.2025 |
| | PW2 | 02.12.2025 | 02.12.2025 |
| | PW3 | 02.12.2025 | 02.12.2025 |
| | PW4 | 02.12.2025 | 02.12.2025 |
| | PW5 | 10.03.2026 | 10.03.2026 |
| | PW6 | 10.03.2026 | 10.03.2026 |
| | PW7 | 14.05.2026 | 14.05.2026 |
| | PW8 | 19.05.2026 | 19.05.2026 |
| Examination U/s. 351 (1) (b) BNSS | 01.06.2026 | | |
| Abscondence of an Accused | – | | |
| Grant of Stay | – | | |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 01.06.2026 ஆம் தேதி அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பிற்காக திருமதி.M.நித்யா B.A.B.L, அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை II அவர்கள் முன்னிலையாகியும், A1 – A5 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.B.தினேஷ்பாபு, மற்றும் திரு.S.சரவணன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பகரும்.

**<u>தீர்ப்புரை</u>**

**1.** இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

**2.** இவ்வழக்கின் புகார்தாரரான சாட்சி–1 மணிகண்டன் என்பவரது தயாரான சாட்சி–2 ஜோதி என்பவருக்கும் அவரது உடன் பிறந்தவர்களான எதிரிகள் அண்ணாமலை, தயாளன், வீரராகவன், பூபாலன், தேவி ஆகியோர்களுக்கும் இடையே வேடந்தாங்கல் கிராமத்தில் உள்ள பூர்வீக சொத்தை பிரிப்பதில் பிரச்சினை இருந்து வந்துள்ளது. இந்நிலையில் 01.05.2019 ம் தேதி காலை 10.00 மணியளவில் ஏ 1 எதிரி அண்ணாமலை என்பவர் சாட்சி–2 ஜோதியின் வீட்டுக்கு சென்று அவரிடம் சொத்தை பிரிக்க வேண்டும் உன் ஆதார் அட்டையை கொடு என்று கேட்டுள்ளார். அதற்கு சாட்சி–2 ஜோதி ஆதார் அட்டையை கொடுக்க முடியாது என்று கூறியுள்ளார். உடனே ஏ 1 அண்ணாமலை என்பவர் டேய் தெவிடியா உன்னை என்ன செய்கிறேன் பார் என்று அசிங்கமாக திட்டிவிட்டு அங்கிருந்து சென்று, மீண்டும் பகல் 12.00 மணியளவில் ஏ 2 தயாளன், ஏ 3 –வீரராகவன், ஏ 4– பூபாலன், ஏ 5 –தேவி ஆகியோரை சாட்சி–2 ஜோதியின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துள்ளார். அப்போது எதிரிகள் அவர்களது கைகளில், கத்தி, தடி, கல் போன்ற ஆயுதங்களை வைத்துக்கொண்டு தெவிடியா பேபர்ஸ் வெளியவாடி என்று கூறியுள்ளார்கள். சாட்சி–2 ஜோதி அவரது வீட்டின் உள்ளே இருந்து வெளியே வந்ததும், அவரை ஏ 1 எதிரி அண்ணாமலை கம்பால் தோள்பட்டையில் அடித்துள்ளார். ஏ 2 எதிரி தயாளன் காலால் எட்டி உதைத்து செங்கல்லை தூக்கி அடித்துள்ளார். ஏ 4 எதிரி பூபாலன் என்பவர் கத்தியால் சாட்சி–2 ஜோதியை வெட்ட முயன்றுள்ளார்கள். ஏ 5 எதிரி தேவி அவளை சாவடி என்று சொல்லி, சாட்சி–2 ஜோதி என்பவரின் முடியை பிடித்து கீழே தள்ளி கையால் அடித்துள்ளார். அப்போது ஏ 3 எதிரி வீரராகவன் அவளை சாவடி என்று சொல்லி, சாட்சி–2 ஜோதியை கையால் அடித்துள்ளார். சண்டையை மடக்கிய சாட்சி–1 மணிகண்டன் என்பவரையும் மேற்கண்ட எதிரிகள் அசிங்கமாக திட்டி அடித்துள்ளனர். பின்னர் ஏ 1 முதல் ஏ 5 வரையிலான எதிரிகள் 5 பேரும் சேர்ந்து கொண்டு சாட்சி–1 மணிகண்டன், சாட்சி–2 ஜோதி ஆகியோரை பார்த்து மிரட்டியுள்ளனர். எதிரிகள் தாக்கியதில் சாட்சி–2 ஜோதி என்பவருக்கு சொற்பகாயம் ஏற்பட்டுள்ளது. எனவே எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(2) IPC ன் கீழ் தண்டிக்கதக்கவர்கள் என்று மதுராந்தகம் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், வழக்கினை 18.09.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் பிணையில் சென்றிருந்ததால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் பிரிவு 230 of BNSS கீழ் குற்றப் பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து பிரிவு 263 of BNSS ன் கீழ் எதிரிகளின் மீது பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(2) IPC ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் குறித்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு பிரிவு 265 of BNSS ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

4. அதன்படி குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் 8 பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரை விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரிகளிடம் BNSS பிரிவு. 351 (1) (b) ன் கீழ் 01.06.2026ம் தேதியன்று வினவிய போது அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் போதுமான

சாட்சியங்களுடன் தகு நிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

<u>**தீர்வு:–**</u>

**7.** அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா. ஆ. 1 முதல் 6 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசுத் தரப்பால் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்தார்.

**8.** அ.சா.1 இந்த வழக்கின் புகார் அளித்த நபர் ஆவார். அவர் அளித்த புகாரில் கடந்த 01.05.2019 ம் தேதி காலைசுமார் 10.00 மணியளவில் குற்றமுறையீட்டாளரும், அவரது அம்மா ஜோதி, க/பெ.படவேட்டான் என்பவரும் வீட்டில் இருந்த போது, வேடந்தாங்கல் கிராமத்தை சேர்ந்த அண்ணாமலை த/பெ.ஜானகிராமன் என்பவர் குற்றமுறையீட்டாளரின் தாயிடம் ஆதார் கார்டை கொடுங்கள் என கேட்டார். குற்றமுறையீட்டாளரின் தாய் ஆதார் அட்டையை கொடுக்க முடியாது என்று கூறியுள்ளார். அதற்கு மேற்படி நபர் குற்றமுறையீட்டாளரின் தாயை பார்த்து டேய் தெவிடியா உன்னை என்ன செய்கிறேன் பார் என்று அசிங்கமாக திட்டிவிட்டு சென்றுள்ளார். பிறகு மேற்படி அண்ணாமலை, அவருடன் தயாளன், பூபாலன், வீரராகவன், மற்றும் தேவி ஆகியோர் கையில் கத்தி, கம்பு, தடி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் குற்றமுறையீட்டாளரின் வீட்டின் அருகே வந்து மீண்டும் குற்றமுறையீட்டாளரின் அம்மாவை டேய் தெவிடியா, பெபர்ஸ் வெளியவாடி என்று கூறினார்கள். அண்ணாமலை கம்பால் தோள்பட்டையில் அடித்தார். தயாளன் காலால் குற்றமுறையீட்டாளரின் அம்மாவை எட்டி உதைத்தார். பிறகு செங்கல்லால் அடித்தார். பூபாலன் கத்தியை கொண்டு வந்து குற்றமுறையீட்டாளரின் அம்மாவை வெட்ட வந்தார். தேவி என்பவர் குற்றமுறையீட்டாளரின் அம்மாவின் முடியை பிடித்து கையால் அடித்தார். குற்றமுறையீட்டாளர் ஓடிச் சென்று மடக்கிய போது,

குற்றமுறையீட்டாளரையும் கீழே தள்ளி விட்டு தயாளன் என்பவர் பைக் சாவியில் குற்றமுறையீட்டாளரின் கழுத்தில் குத்தினார். குற்றமுறையீட்டாளர் மற்றும் அவரது அம்மா கத்தினார்கள். மேற்படி நபர்கள் நீங்கள் ஊரைவிட்டு ஓடி விடுங்கள் இல்லையென்றால் உங்களை கொலை செய்யாமல் விடமாட்டேன் என கூறிவிட்டு சென்றார்கள். எனவே மேற்படி நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**9.** மேற்படி அ.சா.1 நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் 01.05.2019 அன்று காலை 10.00 மணியளவில் என் அம்மாவின் தம்பியான ஆஜர் எதிரி அண்ணாமலை என் வீட்டுக்கு வந்து சொத்தை பிரிப்பதற்கு என் அம்மாவிடம் ஆதார் கார்டை கேட்டார். என் அம்மா தரமுடியாது என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு அண்ணாமலை சென்று தயாளனை கூட்டிவந்து என் அம்மாவை தேவிடியா, பேபர்ஸ் வெளியே வாடி என்று அண்ணாமலையும், தயாளனும் என் அம்மாவை அசிங்கமாக திட்டினார்கள். வெளியே வந்த அம்மாவை அடித்து வெளியே இழுத்துவந்தனர். தேவி என்பவர் என் அம்மாவின் முடியை பிடித்து அடித்தார். பிறகு வீரராகவன், தயாளன், அண்ணாமலை, பூபாலன் மற்றும் தேவி ஆகியோர் முடியை பிடித்து அடித்தார்கள். பூபாலன் என்பவர் என் அம்மாவை கொம்பால் அடித்தார், பூபாலன் கையில் கத்தியை வைத்துக் கொண்டு உன்னை வெட்டிவிடுவேன், உன்னை நான் என்ன செய்கிறேன் பார், இந்த ஊரில் எப்படி வாழ்கிறீர்கள் என்று பார்க்கிறேன் என்று கூறினார். தயாளன் என்பவர் என்னை பிடித்து சாவியால் என் கழுத்தில் குத்திவிட்டார். அவர்கள் அடித்துவிட்டு சென்றுவிட்டார்கள். நான் என் அம்மாவை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்று பின்னர், மேற்படி சம்பவம் தொடர்பாக 02 ம் தேதி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 தனது சாட்சியத்தில் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வருடம் தெரியவில்லை, ஜனவரி மாதம் 1ம் தேதி காலையில் சுமார் 9.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் வந்து என்னுடைய ஆதார்

கார்ட்டை கேட்டார்கள். எதற்கு ஆதார் கார்ட்டை கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆதார் கார்ட் கொடு இல்லையென்றால் உன்னை அடிப்போம் என்று மிரட்டினார்கள். தேவி என்பவர் என்னுயை முடியை பிடித்து அடித்தார். என்னுடைய தம்பி பூபாலன் என்பவர் கம்பியை எடுத்து என் காலில் அடித்தார். நான் கத்தி அழுதேன். பூபாலன் மற்றும் தயாளன் கத்தியை எடுத்து வந்து என்னை வெட்டிவிடுவதாக மிரட்டினார்கள். நான் மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டேன். அடிபட்ட என்னை என்னுடைய பிள்ளைகள் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11.** அ.சா.3 தனது சாட்சியத்தில் 03.05.2019 அன்று காலை 10.00 மணியளவில் அண்ணாமலை வந்து என் அம்மாவிடம் ஆதார் கார்டு கேட்டார். அதன் பின்னர் அவர் சென்று அவரது தம்பி தங்கை ஆகிய தயாளன், பூபாலன், வீரராகவன், தேவி ஆகியோர்களை அழைத்து வந்து என் அம்மாவை ஆதார் கேட்டு கையாலும், செங்கல்லாலும் அடித்துள்ளார்கள். பூபாலன் மற்றும் தயாளன் ஆகியோர் கத்தியை எடுத்து வந்து வெட்ட வந்தார்கள். தேவி என்பவர் என் அம்மாவின் முடியை பிடித்து அடித்தார். தயாளன் என்பவர் வண்டி சாவியை எடுத்து என் தம்பியின் கழுத்தில் குத்தியுள்ளார். அதன் பிறகு நான் என் அம்மா மற்றும் தம்பியை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12.** அ.சா.4 தனது சாட்சியத்தில் சாட்சி தனசேகர் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். தேதி மாதம் ஞாபகமில்லை. மணி என்பவரின் அம்மாவிற்கும், அந்த அம்மாவின் சகோதரர்களுக்கும் சண்டை நடந்தது தொடர்பாக 03ம் தேதி சுமார் காலை 7.00 மணியளவில் போலிசார் போட்டோ காட்டி விசாரணை செய்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். அதில் நானும் தனசேகர் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** அ.சா.5 தனது சாட்சியத்தில் எதிரிகளை தெரியும். 01.05.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது எதிரி அண்ணாமலை எங்கள் வீட்டிற்கு வந்து என் அம்மாவிடம் சொத்து பிரிக்கவேண்டும் என்று உன் ஆதார் கார்ட்டை கொடு

என்று கேட்டார். என் அம்மா ஆதார் கார்ட்டை கொடுக்கமாட்டேன் என்று சொல்லவும், எதிரி அண்ணாமலை என் அம்மாவை அடித்துவிட்டு, இரு நான் என் அண்ணன் தம்பிகளை அழைத்துகொண்டு வருவதாக சொல்லி சென்றுவிட்டு மதியம் 12.00 மணிக்கு எதிரிகள் அண்ணாமலை, தயாளன், பூபாலன், தேவி, வீரராகவன் ஆகியோர் வீட்டிற்கு வந்து ஆதார் கார்ட்டை கேட்டு என் அம்மாவை எதிரி பூபாலனும் அண்ணாமலையும் செருப்பு மற்றும் கட்டையால் அடித்தார்கள். தயாளனும் கையால் என் அம்மாவை அடித்தார். எதிரி வீரராகவன் மற்றும் தயாளன் ஆதார் கார்டை கொடு இல்லை என்றால் ஊரை விட்டு விரட்டிவிடுவேன், வீட்டை இடித்துவிடுவேன் என்று என் அம்மாவை மிரட்டினார். உங்களை காலி செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14.** அ.சா.6 தனது சாட்சியத்தில் சாட்சி சுப்புராயன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**15.** அ.சா.7 தனது சாட்சியத்தில் நான் கடந்த 2019ம் ஆண்டு மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். கடந்த 01.05.2019 அன்று பணியில் இருந்தபோது சுமார் 1.20 மணிக்கு ஜோதி வயது–54 என்பவர் தன்னை தெரிந்த 4 பேர் தன்னுடைய வீட்டின் அருகே மதியம் 12.00 மணியளவில் தாக்கியதாக கூறி தன்னுடைய மகன் மணிகண்டன் என்பவரோடு சிகிச்சைக்காக என்னிடம் வந்தபோது, நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவர் தன்னுடைய வலது தோள்பட்டையிலும், வலது முட்டியிலும், வயிற்றிலும் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு வெளிக்காயங்கள் ஏதும் காணப்படவில்லை. அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என நான் சான்று வழங்கினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**16.** அ.சா.8 இந்த வழக்கில் விசாரணை அதிகாரி ஆவார். அவர் இந்த வழக்கில் தான் மேற்கொண்ட விசாரணை நடைமுறைகளை குறித்து விரிவாக சாட்சியம் அளித்துள்ளார்.

**17.** இந்த வழக்கில் அரசு தரப்பில் சாட்டப்பட்டுள்ள குற்றமானது எதிரிகளுக்கு எதிராக சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தததில், அ.சா.1 அளித்த புகாரில் 01.05.2019 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் முதலில் 1ம் எதிரி அண்ணாமலை என்பவர் அ.சா.1ன் தாயாரிடம் சொத்தை பிரிப்பதற்காக வேண்டி அவரது ஆதார் கார்டு கேட்டதாகவும், அ.சா.2 ஆதார் அட்டையை கொடுக்க மறுத்தால் 1ம் எதிரி சென்று அவரது சகோதர சகோதரிகளான 2 முதல் 5 எதிரிகளை அழைத்து வந்து அ.சா.2 ஐ அசிங்கமான வார்த்தையில் திட்டி, 1ம் எதிரி அ.சா.2ன் தோள்பட்டையில் கம்பால் அடித்தும், 2ம் எதிரி அ.சா.2 ஐ காலால் எட்டி உதைத்தும், செங்கல்லால் அடித்தும், 4ம் எதிரி அவரை கத்தியால் வெட்ட முயற்சித்தும், 5ம் எதிரி அவரது முடியை பிடித்து கீழே தள்ளி கையால் அடித்தும், 3ம் எதிரி சாவுடி என்று சொல்லி கையால் அடித்தும், இதை தடுக்க வந்த அ.சா.1யும் எதிரிகள் அனைவரும் அசிங்கமாக திட்டி அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1 அவர் அளித்த புகார் சங்கதிகளை அனுசரித்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

**18.** வழக்கு குற்ற சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 ஜனவரி மாதம் 1ம் தேதி காலை 09.00 மணிக்கு எதிரிகள் வந்து ஆதார் கொடு இல்லையென்றால் உன்னை அடிப்போம் என்று மிரட்டியும், தேவி என்பவர் அ.சா.2ன் தலை முடியை பிடித்து அடித்ததாகவும், பூபாலன் கம்பியால் அவரது காலில் அடித்ததாகவும், அ.சா.2 கத்தி அழுத போது பூபாலனும், தயாளனும் கத்தியை எடுத்து வெட்டிவிடுவதாக மிரட்டியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**19.** மேற்படி குற்ற சம்பவத்தை பார்வையிட்ட சாட்சியாக பட்டியலிடப்பட்டுள்ள அ.சா.3 தன்னுடைய சாட்சியத்தில் 03.05.2019 அன்று காலை 10.00 மணியளவில் அண்ணாமலை என்பவர் அ.சா.2 இடம் ஆதார் அட்டையை கேட்டதாகவும், பின்னர் அவர் சென்று அவரது சகோதர சகோதரிகளான மற்ற எதிரிகளை அழைத்து வந்து அ.சா.2 ஐ கையாலும், செங்கல்லாலும் அடித்ததாகவும், பூபாலன் மற்றும் தயாளன் ஆகியோர் கத்தியை கொண்டு வெட்ட வந்தாகவும், தேவி என்பவர் அ.சா.2ன் முடியை

பிடித்து அடித்ததாகவும், தயாளன் என்பவர் வண்டி சாவியை எடுத்து அ.சா.1ன் கழுத்தில் குத்தியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.3 வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் பட்டியலிடப்பட்டுள்ள போதிலும், அ.சா.3 வழக்கு சம்பவத்தின் போது தான் சம்பவ இடத்தில் இல்லையென குறுக்கு விசாரணையின் போது சாட்சியம் அளித்துள்ளார்.

**20.** இந்த வழக்கின் குற்றமுறையீட்டாளரான அ.சா.1 மற்றும் வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ஆகியோர் அ.சா.2ன் பிள்ளைகள் ஆவார்கள். அ.சா.1 தான் அளித்த புகாரில் சம்பவமானது 01.05.2019 அன்று நடந்ததாக குறிப்பிட்டு அதனை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் இந்த வழக்கு குற்ற சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அ.சா.2 வழக்கு சம்பவம் ஜனவரி மாதம் 1ம் தேதி நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2ன் மற்றொரு மகனான அ.சா.3 தன்னுடைய சாட்சியத்தில் சம்பவமானது 03.05.2019 அன்று நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இந்த நிலையில் உண்மையில் வழக்கு சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

**21.** மேலும் அ.சா.1 தன்னுடைய புகாரில் சம்பவமானது 01.05.2019 அன்று 10.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 தன்னுடைய வாய்மொழி சாட்சியத்தில் குறுக்கு விசாரணையில் சம்பவம் 7 முதல் 10.00 மணிக்குள் நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தேதியை முழுமையாக குறிப்பிடாமல் ஜனவரி மாதம் 1ம் தேதி காலை 09.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும் அ.சா.2க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டில் 01.05.2019 அன்று அ.சா.1க்கு தெரிந்த 4 நபர்கள் செங்கல், கத்தி, சாவி, வேலிகாத்தான் கொம்பு ஆகிய ஆயுதங்களால் மதியம் சுமார் 12.00 மணியளவில் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்ற சந்தேகமும் வலுவாகிறது.

**22.** மேலும் சாட்சிகள் 1முதல் 3 அ.சா.2ஐ 5 நபர்கள் அடித்ததாக நீதிமன்றத்தில் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால் அ.சா.2க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டில் அ.சா.2ஐ 4 தெரிந்த நபர்கள் அடித்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அ.சா.2 ஐ எதிரிகள் செங்கல், கத்தி, சாவி, வேலிகாத்தான் கொம்பு ஆகிய ஆயுதங்களை கொண்டு அடித்ததாக அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால் அ.சா.1 க்கு வழங்கப்பட்ட அ.சா.ஆ.3 விபத்து பதிவேட்டில் அ.சா.1 க்கு வெளிப்படையான காயங்கள் எதுவும் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை. அ.சா.2 ஐ சுமார் 5 நபர்கள் கத்தி, கம்பு, செங்கல் போன்ற ஆயுதங்களால் தாக்கியுள்ள போதிலும், அ.சா.2 க்கு வெளிப்படையான காயம் எதுவும் இல்லை என்று விபத்து பதிவேடு வழங்கப்பட்டுள்ளதை பார்க்கையில், அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் அ.சா.7 ஆக சாட்சியம் அளித்துள்ள மருத்துவர் ஜெபசீலி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் தன்னிடம் சிகிச்சைக்கு வந்த நபர் வலி இருப்பதாக பாசாங்கு செய்ய வாய்ப்புள்ளது என சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 க்கு வெளிப்படையான காயங்கள் இல்லாத நிலையில் உண்மையிலேயே அ.சா.2 க்கு வலி உணர்வு இருந்ததா அதனால் தான் அ.சா.2 மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றாரா என்ற சந்தேகம் வலுக்கிறது.

**23.** மேலும் வழக்கு சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டுள்ள அ.சா.5, அ.சா.2 ன் மற்றொரு மகன் ஆவார். இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகியோர்களில் அ.சா.4 அரசு தரப்பை ஆதரித்தும் அ.சா.6 அரசு தரப்புக்கு எதிராகவும் சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.4 தன்னுடைய குறுக்கு விசாரணையின் போது சம்பவத்தை அவர் நேரடியாக பார்த்ததாகவும், பின்னர் போலிசார் சண்டை நடந்ததை செல்போனில் காட்டியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 தான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், அ.சா.2 ன் மகன்கள் அனைவரும் அவருடைய நண்பர்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.4 அ.சா.2 ன் மகன்களுடன் காவல் நிலையத்திற்கு சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இந்த நிலையில் அ.சா.4 இந்த வழக்கின் மீது ஆவர்முடைய சாட்சியோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

**24.** அ.சா.1ன் வாய்மொழி சாட்சியத்தை கவனமாக பரிசீலனை செய்ததில், வழக்கு சம்பவத்தை சுமார் 20 பேர் வேடிக்கை பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடமான அ.சா.ஆ.5 மற்றும் 6 ஐ பார்வையிட்டதில் சம்பவ இடமானது வீடுகள் அதிகம் நிறைந்த பகுதி என்பது தெரியவருகிறது. இந்த நிலையில் இந்த வழக்கில் ஒரு சுதந்திரமான சாட்சி கூட விசாரிக்கப்படாதது அரசு தரப்பு வழக்கின் மீதான சந்தேகத்தை மேலும் வலுவடைய செய்கிறது. எனவே எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் சாட்டப்பட்டுள்ள குற்றமானது உண்மையிலேயே நடந்ததா என்ற சந்தேகம் எழுகின்றது.

**25.** எனவே முடிவாக மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து இதச பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506 (2), IPC ன் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

**26.** இவ்வழக்கின் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**27.** எதிரிகளின் பிணை பத்திரம் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ம் நாள் திங்கள்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VALLIAMMA

Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.15 10:31:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
மதுராந்தகம்.

**அரசு தரப்பு  சாட்சிகள் விபரம்:–**

| Prosecution Witness No. | List of Witness | Name of the Witness | Description |
|---|---|---|---|
| 1 | PW1 | மணிகண்டன் த/பெ.படவெட்டான் | Complainant |
| 2 | PW2 | ஜோதி க/பெ.படவெட்டான் | Victim Witness |
| 3 | PW3 | நடராஜன் த/பெ.படவெட்டான் | Eye witness |
| 4 | PW4 | சுப்பிரமணி த/பெ.வேதாச்சலம் | Mahazar witness |
| 5 | PW5 | பிரபாகரன் த/பெ.படவெட்டான் | Hearsay witness |
| 6 | PW6 | தனசேகர் த/பெ.விஸ்வநாதன் | Mahazar witness |
| 7 | PW7 | ஜெபசீலி/ மருத்துவர் | The treating doctor of Witness 2 and given AR Copy |
| 8 | PW8 | ஜெயராமன் /காவல் உதவி ஆய்வாளர் | Investigating Officer |

**அரசுத்தரப்பு  சான்று ஆவணங்கள் விபரம்:–**

| Exhibit No. | Description of the Exhibits | Proved by/ Attested by |
|---|---|---|
| Ex.P.1 | புகார் | PW-1 |
| Ex.P.2 | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் 2 வது கையொப்பம் | PW-4 |
| Ex.P.3 | ஜோதிக்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | PW–7 |
| Ex.P.4 | முதல் தகவல் அறிக்கை | PW–8 |
| Ex.P.5 | பார்வை மகசர் | PW–8 |

| | | |
|---|---|---|
| Ex.P.6 | மாதிரி வரைபடம் | PW-8 |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரி தரப்பு சான்று பொருள் :- இல்லை

VALLIAMMA Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.15 10:32:02 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
மதுராந்தகம்.

**CC 233/2025**

**15.06.2026**

எதிரிகள் ஆஜர். தீர்ப்பு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகாததால் எதிரிகள் இதச பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(i), IPC–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை u/s.271(1) of Bharathiya Nagarik Suraksha Sanhita, 2023 ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**JM No.I/MKM**